**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP. No.64/2016**

Deposition of RW1 solemnly affirmed under Provision Oaths Act 1969(Act 44 of 1969), the 02nd day of March 2023.

| | | | |
|---|---|---|---|
| Name: | கிருஷ்ணமூர்த்தி | Religion: | --- |
| Father's Name: | ஆண்டி | Caste: | --- |
| Village: | | Calling: | மேனேஜர், நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்,சேலம் |
| Taluk: | சேலம் | Age: | 50 |

**முதல் விசாரணை** (சத்திய பிரமாணத்தின் பேரில்)

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர், சேலம் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனத்தின் மேனேஜர் மற்றும் எ.ம.சா.1 ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சிக்காக பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். அதில் நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டுள்ளேன். அதை எனது தரப்பு முதன்மை சாட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து நடந்தது உண்மை என்றால் ஆவணத்தில் விபத்து நடந்ததாக கூறப்பட்டுள்ளது. மனுதாரர் பாலிசி விதிமுறைகளை மீறவில்லை என்றால் சரியல்ல. அவரே உரிமையாளராகவும், ஓட்டுநராகவும் இருந்துள்ளார் அதனால் PA கவரேஜின் படி அவர் கிளைம் பார்மை காப்பீடு நிறுவனத்திடம் தான் கொடுத்து இழப்பீடு கோரமுடியும் என்பதால் விதிமீறல் என்று கூறுகிறேன். மேற்படி விதிமீறல் குறித்து பாலிசி விதிமீறலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மோட்டார் வாகன சட்ட பிரிவின் படி பாலிசி வழங்கப்பட்டுள்ளது என்பதால் அதிலுள்ள நிபந்தனைகளுக்கும் பாலிசி கட்டுப்படும். நான் கூறுவது போல் நிபந்தனைகள் பாலிசியில் குறிப்பிடாததால் பாலிசி விதிமீறாததால் நான் வழக்கிற்காக இழப்பீடு கொடுக்க தப்பிப்பதிலிருந்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் பிரிமியமாக உரிமையாளருக்கு என்று ரூ.50/-ம் ஓட்டுநருக்கு என்று ரூ.50/-ம் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அது உரிமையாளர் மற்றும் ஓட்டுநருக்கு தான் பெறப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் மேற்படி வாகன ஓட்டுநருக்கு செல்ல தகுந்த ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையிலும், ஓட்டுநர் என்ற அடிப்படையிலும் நாங்கள் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- கிருஷ்ணமூர்த்தி

Sd/-Tmt. S. Uma Maheswari,
Subordinate Judge, Sankari.